மீட்டர் தூரம் வரையிலும் இப்போது நாம் நகரப் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவதைப் போல அந்தப் பணிமனை அமைப்பதற்கு இப்போது சாத்தியக் கூறுகள் இல்லை. இருந்தாலும்கூட, உறுப்பினரவர்கள் எந்தெந்த பகுதிகளுக்கு நகரப் பேருந்து விடவேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்தால், நம்முடைய தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவி திட்டத்தின் அடிப்படையில் 1992-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளே அனைத்துப் பேருந்துகளும் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 538, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

538—

மல்லசமுத்திரம் பகுதியில் நூற்பாலை அமைத்தல்

*1564—டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதிக்கு உட்பட்ட மல்லசமுத்திரம் பகுதியில் நூற்பாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 25,000-க்கும் அதிகப்பட்ட நெசவாளர் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டத்தை வரும் ஆண்டிலாவது பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், அம்மாப்பேட்

1992 ஏப்ரல் 10]

டையில் சேலம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை 50 ஆயிரம் கதிர்களுடன் இயங்கி வருகின்றது. அது மட்டும் அல்லாமல் தமிழகத்தில் ஏறத்தாழ 17 நூற்பு ஆலைகள் உள்ளன. அவைகளில் ஏறத்தாழ 16 ஆயிரம் முதல் 18 ஆயிரம் பேல்கள் பஞ்சு உற்பத்தியாகின்றன. சாரி நூல் உற்பத்தி ஆகிறது. தற்போது தமிழகம் நூல் உற்பத்தியில்......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கைத்தறி அமைச்சருக்கு அருகில் உள்ள அமைச்சர்கள் உதவிகரமாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : தற்போது நாம் நூல் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருக்கிற காரணத்தாலே இயலாது என்பதை வருத்தத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அம்மாப்பேட்டையில் கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது என்று சொன்னார்கள். அம்மாபேட்டைக்கும் மல்ல சமுத்திரத்திற்கும் 21 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதாலும், நெசவாள பெருங்குடி மக்கள் அன்றாடம் சில சங்கடங்களை மேற்கொண்டு இந்தத் தொழிலை செய்வதாலும் நமது அமைச்சர் அவர்கள் ''ஆம்'' என்ற பதிலை அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் விரும்பினால் நான் போக்குவரத்துத்துறை அமைச்சரோடு கலந்து பேசி எத்தனை பஸ்கள் வேண்டுமோ அதை விடுவதற்கு ஏற்பாடு மேற்கொள்கிறேன். நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம். (சிரிப்பு). புரட்சித் தல்லவியினுடைய ஆட்சிக் காலத்தில்தான் நெசவாளர்களிடம் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் ஒதுக்கப்பட்டவர்களாக ஒடுக்கப்பட்டவர்களாக இருந்த நெசவாளி பெருங்குடி மக்கள் பேரறிஞர் அண்ணா காலத்தில் விலாசம் காட்டப்பட்டு, புரட்சித் தலைவருடைய ஆட்சி காலத்தில் வழிகாட்டப்பட்டு நம்முடைய தொலை நோக்கு தலைவியாக இருக்கிற ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில்தான் அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். அவர்களுக்கான (மேசையைத் தட்டும் ஒலி) தொலை நோக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இன்னும் பல்வேறு திட்டங்கள் சேலம் மாவட்டத்

திலே இருக்கின்றன. அதனால் நீங்கள் அஞ்சத் தேவையில்லை. அதிலே ஒரு பகுதி உங்களுக்கு ஒதுக்கீடு செய்து தருவோம் என்பதை கோடிட்டுக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 539, 540 மற்றும் 541 ஆகியவை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப் பெறுகின்றன.

வினா எண். 542, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

542—

ஒகேனக்கல்லை நகரியமாக மாற்றும் திட்டம்.

*1054—டாக்டர் வெ. புருஷோத்தமன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னாகரம் தொகுதி ஒகேனக்கல்லை நகரியமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நகரியமாக மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. ஆண்டு முழுவதும் அருவியிலே நீராடக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே காணப்பட்டு சிறந்த சுற்றுலாத் தலமாக அந்த மாவட்டத்திலே விளங்குகிறது. அந்தப் பகுதி முன்னேறவில்லை. ஆகவே, அதை சிறிய ஒரு நகரியமாக ஏற்படுத்தினால் அந்தப் பகுதி முன்னேறும். லட்சக் கணக்கான மக்கள் அங்கே வந்து செல்கிறார்கள். ஆகவே, இப்போது இல்லை என்றாலும் வருங்காலத்திலாவது இருக்குமா என அறிய விரும்புகிறேன்.